

குருதேவர் ஞாலகுரு சித்தர்
அரசயோகிக் கருவூரார்



மெய்ஞ்ஞானக் கொடி



பிற்காலச் சோழப்பேரரசின் தந்தை
சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார்

**"பகுத்தறிவு வழி தமிழர் சமயம்"**
**"தமிழர் மதமே இந்துமதம்"**
**"இந்துமதம் ஒரு பகுத்தறிவு மதம்"**
**"தமிழின எழுச்சிக்கு மத மறுமலர்ச்சியே வழி"**

## உள்ளுறை

1. 26.1.81இல் இரா.இரா.முத்திரைக்கோட்டை சித்தரடியான் ஒருவருக்கு குருதேவர் எழுதிய வாழ்த்து அஞ்சலும், அடியான் மூலம் குருதேவர் எழுதிய கட்டுரை அஞ்சலும்

2. 22-1-81இல் வேடசந்தூர் பரஞ்சோதி சாமிகள் எழுப்பிய கேள்விகளும், அவருக்கு குருதேவர் எழுதிய பதில் கட்டுரை அஞ்சலும்

3. "ஆயுதப் புரட்சியல்ல! காகிதப் புரட்சி!" - 1985இல் குருதேவர் எழுதிய கட்டுரை அஞ்சல்.

4. சில அஞ்சல்களிலிருந்து எடுத்த குருபாரம்பரிய வாசகங்கள்



நவநாதசித்தர் என்ற
சிறப்பினைப் பெற்ற
காரல் மார்க்சு

# தமிழர் மதமே இந்துமதம்

அனுப்புநர்
குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரார்
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி
அரசயோகி இராசிவட்ட நிறைவுடையார்

பெறுபவர்:
சித்தரடியான்
இரா.இரா.முத்திரைக்கோட்டை (அஞ்சல்)

ஆர்வமும் விருப்பாற்றலும் மிக்க நண்ப! நமது அடியான் சிவகங்கை வெட்டுடையார் காளி சன்னிதானம் மிகச்சிறந்த அஞ்சல் எழுதுமளவுக்கு உங்களுக்கு ஊழ்வினையும் விதியும் மிகச்சிறப்பாக உள்ளன. இந்த அஞ்சலையும் அடியான் பொன்னுசாமி ந.சுப்பராயன் அவர்களுக்கு எழுதிய அஞ்சலையும் இணைத்துப் "பகுத்தறிவுவழி தமிழர் சமயம்", "தமிழர் மதமே இந்துமதம்", "தமிழின எழுச்சிக்கு மதமறுமலர்ச்சியே வழி", என்ற தலைப்புகளை வழங்கி இச்சிறுநூலாக அச்சிடலாம் அல்லது கையெழுத்து நூலாக வெளியிடலாம்.

நீங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டீர்கள். உங்களால் உருவாக்கப் படுபவர்களும் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். நாம் சந்திக்க சிந்திக்க ஏற்பாடுகளைச் செய்யுங்கள். வீரமாகாளி சன்னிதானம் கூறும் சட்டதிட்டங்களை, கட்டுப்பாடுகளை, முறைகளைக் கையாண்டு சிறந்த சித்தரடியான்களாக வளருங்கள், வாழுங்கள், செயல்படுங்கள் என்று வாழ்த்துகின்றோம் யாம்.

ஓம் திருச்சிற்றம்பலம்

அன்பு
சித்தர் கருவூரார்
26/1/81

### திருவுள ஒப்புதல் ஓலையும் குருவாணை மடலும் ஒருசேர அமையும் அஞ்சல் இது.

அருளாட்சி ஓலைநாயகங்கள்:
1. சிவகங்கை வெட்டுடையார் காளி சன்னிதானம்,
2. திருநெல்வேலி காந்திமதியம்மன் சன்னிதானம்,
3. கருமாரியம்மன் சன்னிதானம், துலுக்காணத்தாள் பீடாதிபதி,
4. கபாலீசுவரி பீடாதிபதி, சித்தர் புலிப்பாணி

பேரன்புமிகு நண்பர் சித்தரடியான் அவர்களுக்கு சிவகங்கை வெட்டுடையார் காளி சன்னிதானம் எழுதியது.

1) தங்கள் கடிதம் கிடைத்தது. ஐயா அவர்கள் தாங்கள் எழுதியுள்ள கடிதத்தைத் தாமும் படித்துப் பின் அருகிலுள்ள மற்றவர்களிடமும் கருத்துக்களை விமரிசனம் செய்தார். பின் அருகிலிருந்த என்னிடம் பதில் எழுதும் பொறுப்பை ஒப்படைத்தார். நான் அதை ஏற்றுக் கொண்டேன். பதில் தொடரும் போது அருள்மிகு பவானியம்மன் சன்னிதானம் அவர்களும், அருள்மிகு திண்டுக்கல் கோட்டைமாரியம்மன் சன்னிதானம் அவர்களும், குருவாணை ஓலைநாயகம் அங்காளபரமேசுவரி சன்னிதானம் அவர்களும் அருகில் உள்ளார்கள். எண்ணற்ற அருவங்களும், அருவுருவங்களும், வழிபடுநிலையினரும் வந்து சென்று கொண்டிருக்கின்றனர். திரு அவதாரம் 23.1.81 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-21க்கு நிகழ்ந்தது. அனைவரும் நலமே.

2) தங்களைப் போன்றுதான் எண்ணற்றோர் ஆர்வத்தால் நமது குருதேவரை அடைந்து அறிவும், அருளும் பெறுகின்றார்கள். அருளும் பொருளும் ஒன்று சேராது என்பது கார்ல் மார்க்சும், அவரைப் பின்பற்றி மார்க்சீய வாதிகளும் எண்ணினர். [இது] மானிட சமுதாயத்துக்கே ஒரு மாபெரும் இழப்பு, தீங்கு, தீமை, கொடிய நோய் என்பதே நமது குருதேவரின் கருத்து. தனிமனித வாழ்வும், அரசியல் வாழ்வும் உண்மையான உயிர்த்துடிப்பு உள்ளவைகளாக அரிய, பெரிய பயன்களை நல்கக் கூடியவைகளாக நேர்மையும், அமைதியும் உடையவைகளாக இருக்க வேண்டுமேயானால் மெய்ப்பொருள் துறை எனப்படும் சமயம் அல்லது மதம் இன்றியமையாததாகும். மார்க்சீய வாதிகள் வெறும் சொல் விளையாட்டால் மதத்தை பயன் அற்றதாக விளம்பரம் செய்து அதன் செயலாற்றலைக் குறைத்து விட்டார்கள். இனியும் அது தொடரக் கூடாது.

3) நண்ப! நமது குருதேவர் அவர்கள் கூறுவார்கள்: அறிவியல் துறையில் தொழில் நுட்ப வல்லுனர்கள் குறைவாகத்தான் இருப்பார்கள். தொழில் நுட்பக் கலைஞர்கள் பலராக இருப்பார்கள், பழுது பார்க்கும் கலைஞர்கள் மிகமிக அதிகமாக இருப்பார்கள். அது போன்றே மதப் பேருண்மைகளை செயலளவில் விளக்கவும், மெய்ப்பிக்கவும் கூடிய அருளாளர்கள் இலைமறைகாயாக எங்காவது சிலராகத்தான் இருப்பார்கள். அருள் வழங்கு செல்வர்களாக சித்தியாளர்கள் காலங்கள் தோறும் ஆங்காங்கே வெளிப்பட்டுச் செயல்படுவார்கள். மதத்தின் நடைமுறைகளுக்கு சாத்திர சம்பிறதாயங்களுக்கு ஆற்றலுண்டு என மெய்ப்பிக்கும் பூசாறிகள், குறிகாரர்கள், வெறியாடுபவர்கள், மருளாளிகள், மந்திறவாதிகள், தாந்தரீகவாதிகள் எப்பொழுதுமே எண்ணிக்கையில் பலராகப் பெருகிக் கொண்டேயிருப்பார்கள். இதன்படிப் பார்த்தால்தான் 'பல வழிபாட்டு நிலையங்கள் ஏன் சத்தி இழந்து போகின்றன' என்பன போன்ற எண்ணற்ற வினாக்களுக்கு விடை கிடைக்கும்.

4) நண்ப! காட்டில் வாழ்பவர்க்கு தண்ணீர், பசிய தாவரங்கள், குகைகள் முதலிய வசதிவாய்ப்புக்களே போதும். நாட்டில் வாழ்பவர்களுக்கு நாகரீகச் சாதனங்கள் தேவை என்றாலும் உலகியலோடு ஒட்டிய சில அடிப்படை வாய்ப்பு வசதிகளாவது தேவை.

இப்பேருண்மைகளை அடிப்படையாகக் கொண்டுதான் நம் குருதேவர் இயங்கவும் பிறரை இயக்கவும் செய்கிறார். வெறும் சாத்திரங்களும் தோத்திரங்களும் மட்டும் நமது மதம் அல்ல. நமது மதத்தில் இரகசியங்களாகக் காக்கப்படும் மறைகள், முறைகள், நெறிகள், வேதங்கள், சித்தங்கள், கலைகள் என்று பலவகைகள் உள்ளன. இவற்றை அரிய, புரிய தக்க ஞானகுருவின் உதவிதான் தேவை. அதுவும் பாரம்பரிய உதவியும் அருட்செல்வமும் உடைய குருவால்தான் இட்டும் தொட்டும் சுட்டியும் விளக்க முடியும். அண்மைக் காலத்தில் வாழ்ந்த வடலூர் அருட்பெருஞ்சோதி இராமலிங்க அடிகளார் சொல்லிலும் எழுத்திலும் குருவழிக் காண்க, குருவழி புரிக, குருவழியுணர்க என்பன போன்ற சொற்றொடர்களையே கூறியுள்ளார். அதைக் கொண்டு பலர் குருவை தேடியலைய ஆரம்பித்தனர். பல குரு தோன்றினர். பல வழிபாட்டு நிலையங்கள் கருவாயின, உருவாயின. ஆனாலும் காலப்போக்கில் அவை மெலிந்து நலிந்து போய்விட்டன. எனவேதான் நம் குருதேவர் இதற்கு முன் தோன்றிய அருளாளரின் வாழ்வியல்களையும் வாழ்வியல் சாதனங்களையும் ஒன்றுபடுத்தி புனிதப் படுத்திடும் முயற்சியில் ஈடுபட்டார். எம்மதமும் சம்மதம், எல்லா அருளாளர்களும் அருளாளர்களே என்ற பொதுமைக் கருத்தை வழங்கி மதமாச்சரியங்களை, வேறுபாடுகளை, போட்டி பொறாமை பூசல்களை அகற்றிடும் பெரும்பணியைத் துவக்கியுள்ளார். யாராக இருந்தாலும் அநுபவத்தில் தமிழ்மொழியின் கடவுட் தன்மைகளையும், சித்தர்களின் உலகளாவிய தெய்வீகப் பணிகளையும், சித்தர்களின் விந்துவழி வாரிசுகளும் குருவழிவாரிசுகளும் சமயப்பயிர் விளைவிக்கும் உழவர்களாக, சமயக்கலை வளர்க்கும் கலைஞர்களாக, சமயம் காக்கும் அருளாளர்களாக வாழ்கிறார்கள் என்ற பேருண்மை அறிந்து கொள்ளலாம் என்ற வாய்ப்பை வழங்குபவரே நம் குருதேவர்.

5) நண்ப! பெயரியல் (பெயர் இராசி), எண்ணியல், வரியியல் (கைரேகை), பிறப்பியல் (சாதகம்), மனையியல் (மனையடி சாத்திரம்), அங்கவியல் (சாமுத்திரிகாலட்சணம்), தொடுகுறி சாத்திரம், கனா சாத்திரம், சகுன சாத்திரம் (விரிச்சி), எந்திரம், மந்திரம், தந்திரம் முதலிய எண்ணற்ற கலைகளின் மூலம் சித்தர்கள் ஒவ்வொரு தனிமனிதனும், தன்னுடைய பழம்பிறப்புகள், மறுபிறப்புகள், இப்பிறப்பின் இன்பதுன்பங்கள் முதலியவற்றை நன்கு தெரிந்து புரிந்து அமைதியான நிம்மதியான நிறைவான இன்பமான வாழ்க்கை வாழும்படி செய்துள்ளார்கள். இம்மாபெரும் அரிய செயல்திட்டம் அரசியல் மாற்றத்தாலும், அன்னிய நாகரீகத்தாலும், வேற்று மத முயற்சியாலும் காலப்போக்கில் பழுதுபட்டு விட்டது. எனவே, மீண்டும் சித்தர்களின் செயல்திட்டத்தைப் பழுது பார்த்து செப்பனிட்டு செயல்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவரே நமது குருதேவர். இவர் தானே தனியொருவராக நின்று இம்மாபெரும் பணிகளை யெல்லாம் செய்து முடிக்க முடியும் என்றாலும் பலரையும் இதில் ஈடுபடுத்தி பலருக்கும் இம்மாபெரும் பணியினை நிறைவேற்றிய உரிமையிலும், பெருமையிலும் பங்கு கிடைக்கும்படிச் செய்வதே நம் குருதேவரின் நோக்கம். எனவே, யாரேனும் சிலர் குருதேவரை விட்டுப் பிரிந்து சென்று விடுவதாலோ அல்லது குருதேவரின் பணிக்கு எதிரணி திரட்டுவதாலோ குருதேவரின் பணி செயல்படுவது நின்று விடாது.

6) நிலஅழுத்தத்தின் காரணமாக நீரூற்றுகள் தானாக வெளிக்கிளம்புவது போல் இந்த இருபதாம் நூற்றாண்டில் சமய சமுதாய அரசியல் அழுத்தங்களால் இலைமறை காயாக இருந்த குருதேவர் தானே வெளிப்பட்டு செயல்படத் தோன்றியுள்ளார். அவர் ஒரு பெரிய நெடிய அரிய தெய்வீகப் பாரம்பரியத்தின் நேரடி வாரிசு என்பதனை தனது ஒவ்வொரு நொடி வாழ்வாலும், தானுதிர்க்கும் ஒவ்வொரு சொல்லாலும், தான் செய்யும் செயலாலும் மிகத் தெளிவாக மெய்ப்பித்து வருகிறார். அவரிடம் எந்த கண்மூடித்தனமும் கிடையாது. கை மூடிய செயலும் கிடையாது. யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்ளலாம். கற்றுக் கொள்ளலாம். பயிற்சி பெறலாம். செயல்படுத்தலாம். ஆனால், அவர் ஆரம்பத்திலேயே ஒவ்வொருவருக்கும் அவரவர் ஊழ்வினைக்கும் விதிக்கும் ஏற்பத்தான் எதையும் சாதிக்க முடியும் என்பதனைத் தெளிவாகக் கூறுகிறார். அதே நேரத்தில் தன்மீது நம்பிக்கையும், குருமீது நம்பிக்கையும், விடாமுயற்சியும் உடையவர்கள் எதையும் சாதிக்க முடியும் என்ற அறிவுரையை அருளுரையாக வழங்கியே செயல்படுகிறார். "ஊக்கமுடையார்க்கு ஏக்கமில்லை", "நோக்கமுடையார்க்கு தூக்கமில்லை", "சாக்குபோக்கு சொல்வோர்க்கு ஆக்கமில்லை", "பிறப்பில் மக்கில்லை", "விதியால் சிக்கலில்லை", "ஊழ்வினையால் தேக்கமில்லை" என்பன போன்ற அரிய குருபாரம்பரிய வாசகங்களை மிக அழகாக தெளிவாக விளக்கமாக எழுதியும் பேசியும் செயல்படுபவரே நம் குருதேவர். இவருடைய பேச்சுக்களில் கருத்துக்களில் மடக்குவாதமோ முடக்குவாதமோ அடக்குவாதமோ இல்லை. எவ்வளவு பெரிய சந்தேகமானாலும் நொடிப் பொழுதில் வெடிவைத்துப் பெரும் பாறைகளைத் தகர்ப்பது போல் அகற்றி விடுவார்.

7) நண்ப! இவ்வளவு வியத்தகு வித்தகு சித்தர் நிலை பெற்ற நம் குருதேவர் நம் காலத்தில் வாழ்ந்தும் நாமெல்லாம் அவரோடு இணைந்து செயல்படாமல் போனால் நமக்கெல்லாம் தீராத பழியும் வீணான மொழியும்தான் கிடைக்கும். அறுபத்திமூன்று நாயன்மார்களும் பன்னிரண்டு ஆழ்வார்களும் மற்ற அருளாளர்களும் சித்தர்களைப்போல் பல்வேறு

வகைப்பட்ட நிலையான வாரிசுகளை உருவாக்காமல் போய்விட்டார்கள் என்று அடிக்கடி வருந்தும் நம் குருதேவர் தம்மால் முடிந்தவரை யார் வந்தாலும் அருட்துறைக் கலைகளையும், அறிவியல்துறைக் கலைகளையும், தத்துவங்களையும், சாத்திரங்களையும் தாராளமாக வாரிவாரி வழங்கிக் கொண்டிருக்கின்றார். ஆனால் விளைந்த அறுவடைப் பயனைத் தானே அடைய வேண்டும் என்று எதிர்பார்க்க வில்லை. உலகம் முழுதுமுள்ள மானுட சமுதாயம் அனுபவித்தால் போதும் என்ற பெருநோக்கால் செயல்படுகிறார் நம் குருதேவர்.

8) நண்ப! நம் குருதேவருக்கு இன்றைய வாழ்க்கைச் சூழலில் அமைதியாக இலைமறைகாயாக வாழ்ந்து செல்லும் அளவிற்கு வசதி வாய்ப்புக்கள் உள்ளன. இருந்தும் துறவு மனப்பான்மையோடு இரவு பகலாக சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள், சித்தர்நெறிக் கலைஞர்கள், சித்தர்நெறிச் செயல்மறவர்கள் முதலியவர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். இப்பேருண்மையினை உணர்ந்து நாமெல்லாம் நம்மால் முடிந்த அளவு குருதேவரின் பணி சிறக்க உழைக்க வேண்டும். இதற்கு நமது குருதேவரிடம் அடிக்கடி முதலில் பல தனிமனிதர்கள் தவம், வேள்வி, பூசை, யாகம், யக்ஞம், ஓமம், ஓகம் முதலியவைகளைச் செய்து சத்திகளையும், சித்திகளையும் பெற்றிட வேண்டும். அதன்பிறகே சமுதாயத்தின் முன் வந்து சித்தர்நெறிச் சாட்சிகளாகக் காட்சியளிக்க வேண்டும்.

9) நண்ப! நமது குருதேவர் தான் உருவாக்குகின்ற ஒவ்வொருவரும் மதம் மனித சமுதாயத்திற்கு தேவையானது என்ற தத்துவத்தையும், சித்தர்நெறியால்தான் குடும்பவாழ்வு, சமுதாயவாழ்வு, அரசியல்வாழ்வு முதலியவற்றில் நிம்மதியும், நிறைவும், அமைதியும் நிலைத்த தன்மையை உருவாக்கித் தரமுடியும் என்ற தத்துவத்தையும் விளக்கக் கூடிய சான்றுகளாகவும், ஊன்றுகளாகவும் விளங்கிடுவர் என்று அடிக்கடிக் கூறுவார். இதனுடைய உண்மைப் பொருள் ஆழ்ந்து சிந்திப்பவர்க்கே விளங்கிடும். அதாவது நமது குருதேவரால் உருவாக்கப்படுபவர்களில் ஒரே ஒருவர் உயிரோடு இருந்தால்கூடப் போதும்; சித்தர்நெறியின் அருமைபெருமைகள் உலகுக்கு அறிவிக்கப்பட்டு விடும். எனவேதான், நமது குருதேவர் தன்னிடம் வரக்கூடிய ஒவ்வொரு வரையும் தன்னுடைய வாரிசாக உருவாக்க முயற்சி செய்கிறார். அவர் எவரையுமே புறக்கணித்ததில்லை. எவருடைய எந்த வேண்டுகோளையும் மறுத்ததில்லை. இப்படி எல்லாம் செயல்பட்டு வருகின்ற குருதேவர் தானாக வெளிவந்து சமுதாயத்தை நேரடியாக சந்தித்து சித்தர்நெறியைப் பரப்பும் பணியில் ஈடுபடமாட்டார். அவருடைய விருப்பமெல்லாம் அவரால் உருவாக்கப்பட்ட அடியான்கள், அடியாள்கள், அடியார்கள், கலைஞர்கள் முதலியவர்கள்தான் சமுதாயத்தை நேரடியாகச் சந்தித்து சித்தர்நெறியைப் பரப்ப வேண்டும் என்பது[தான். இதுவே] நம் குருதேவரின் கொள்கை.

10) நண்ப! உலக வரலாற்றில் எத்தனையோ மதத்தலைவர்கள் தோன்றியிருக்கிறார்கள். எத்தனையோ மதங்கள் பிறந்தும் இறந்தும் போயுள்ளன. ஆனால், சித்தர்களுடைய சித்தர்நெறி எனும் இந்துமதம் உலகம் உண்டான நாளில் இருந்தே இருந்துள்ளது. இது அதனுடைய பிறப்பிறப்பற்ற ஒப்பற்ற பெருமையைக் காட்டுகிறது. இப்படிப்பட்ட தத்துவ நிலையின் நேரடியான உரிமை வாரிசுதான் நமது குருதேவர். இவரைத் தெரிந்தும் தெரியாதவராக, புரிந்தும் புரியாதவராக, இவரால் பயனடைந்தும் நன்றியற்றவராக பற்பலர் இருப்பதால்தான் இவர் தன்னை நாடித்தேடி பலமுறை வருபவர்களை மட்டும் தயாரிக்கின்ற மனநிலையைப் பெற்று விட்டார். இருப்பினும் எங்களைப் போன்றவர்கள் இப்போது அதிகமாக இவரோடு பழகி அடியான்களாக ஆகிச் செயல்பட ஆரம்பித்த பிறகு இவரிடம் மீண்டும் பழைய ஆர்வநிலைகள், விருப்பாற்றல் நிலைகள், பொதுமையாகச் செயல்படும் செயலாற்றல் நிலைகள் முதலியவைகள் மறுமலர்ச்சி பெற்றுள்ளன. தங்களைப் போன்றவர்-களும் திரு.சுப்பராயனைப் போன்றவர்களும் குருதேவரை நாடித் தேடி வருவதால் நமது குருதேவருக்கு புதுமைப் பணியில், புரட்சிப் பணியில், மறுமலர்ச்சிப் பணியில், அருளாட்சிப் பணியில் நம்பிக்கையும் தெம்பும் ஏற்பட்டுள்ளன.

11) இவை நாளும் வளர்ந்து வலிமை பெற்றுச் சிறந்திடல் வேண்டும். அதற்காக தங்களைப் போன்றோர்களும் திரு சுப்பரயானைப் போன்றோர்களும் எண்ணற்ற அடியான்களையும் அடியாள்களையும் அடியார்களையும் உருவாக்க வேண்டும். பொது மக்களிடையே சித்தர்நெறி ஆர்வலர்களையும், ஆதரவாளர்களையும் உருவாக்கவேண்டும். நாத்திகத்தின் பெயராலும், பகுத்தறிவின் பெயராலும் மதத்தை மறுப்பவர்களையும் வெறுப்பவர்களையும் திருத்திடல் வேண்டும். இப்பணிகளுக்காக நமது குருதேவரை எப்போது வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

12) நண்ப! உங்களுடைய விருப்பமான வேண்டுகோளின்படி உங்களுக்கான பூசைகள் செய்யப்பட்டு வருகின்றன. அதன் தொகை ரூ.300/=இலிருந்து ரூ.500/=வரை குருதேவருக்கு அனுப்பிவைக்கலாம். பொருளுக்காக அருளை விற்பதாகக் கருத வேண்டாம். நீங்கள் அனுப்புவதை குருதேவர் ஏற்றுக் கொள்வார். இது பண்டைய மரபுகளுக்கேற்ப காணிக்கை பொருளாகக் கருதிக் கொள்ளுங்கள். நமது குருதேவரின் நடைமுறைகளுக்கு, பயிற்சி முறைகளுக்கு, செயல்பாடுகளுக்கு எல்லாம் சித்தர்கள் எழுதி வைத்திருக்கும் நூல்களில் சான்றுகள் ஏராளமாக உள்ளன. எனவே, நமது குருதேவர் நூலோர் மரபுப்படி வாழ்பவர் என்பது

தெளிவு. இதனைத் தாங்களும் மற்றவர்களும் அனுபவத்தால் உணர்வீர்கள்.

13) நண்ப! நமது குருதேவராலும் சித்தர்நெறியாலும் என்னென்ன நன்மைகள் ஏற்படப் போகின்றன என்பதை முதலில் நம்மைப் போன்றவர்கள் நன்கு புரிந்து உணர்ந்து ஒப்புக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நம்மால் நமது குருதேவரையும் சித்தர்நெறியையும் துணிவோடும் தெளிவோடும் பரப்பிட, வளர்த்திட முடியும். இன்றைக்கு உலகிலுள்ள எல்லா மதங்களுமே பரம்பொருள், கடவுள், இறைவன், மூலப்பொருள், தந்தை, படைப்புச் சிற்பி, இயற்கை இயக்கும் சத்தி, உயிர்களின் தலைவன், பரமாத்மா ... என்ற ஒன்று இருப்பதாக நம்புகின்றன. சொல்லுகின்றன. இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் எல்லா மதங்களும் தங்களுடைய தத்துவங்களையும் சாத்திற சம்பிறதாயங்களையும் கட்டிக்காத்து வளர்த்து வருகின்றன. ஆனால், சித்தர்நெறி இந்த நம்பிக்கையை முழுமையாகத் தூக்கி எறிந்து விடுகிறது. அதாவது சித்தர்நெறி அனைத்திற்கும் ஆதியாகவும், அந்தமாகவும், தலைமையாகவும், முழுமையாகவும் ஒரு சத்தி இருக்கின்றது என்பதையே ஒப்புக் கொள்வதில்லை. இதில்தான் சித்தர்களின் அறிவியல் போக்கு, பகுத்தறிவுப் போக்கு, புரட்சிப் போக்கு, புதுமைப் போக்கு, ஆராய்ச்சிப் போக்கு தெளிவாகத் தெரிகின்றது. எனவே, சித்தர்கள் கற்பனாவாதிகளல்ல, கனவுலகவாதிகளல்ல, மடமைவாதிகளல்ல, மூடநம்பிக்கைவாதிகளல்ல, கண்மூடித்தனமான போக்குடையவர்களல்ல, வறட்டு வேதாந்திகளல்ல என்ற பேருண்மை விளக்கமாகின்றது. அதாவது, சித்தர்கள் எதையும் எப்படி? ஏன்? எப்பொழுது? எவ்வாறு? எவ்வளவு காலமாக? எவையெவற்றின் மூலமாக? என்று முறைப்படி வினாக்களை எழுப்பி விடைகண்டு செயல்படுகிறவர்கள் என்ற பேருண்மை தெளிவாகத் தெரிகின்றது. இந்த உலகில் மதத்தின் பெயரால் வானவியல், நிலவியல், காலக்கணக்கீடு, நொடிக்கணக்கீடு, கணிதம், தாவரவியல், விலங்கியல், இரசவாத இயல், பொருளியக்கவியல், உலோகவியல், பொறியியல், மருத்துவ இயல், சமுதாய இயல், அரசியல், போர்முறை, கடல் வாணிபம், மொழியியல், கலை, இலக்கியம், வரலாறு, கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை இப்படி எண்ணற்ற கலைகளைக் கண்டுபிடித்து அவற்றை மதிப்பும் மரியாதையும் உள்ளவர்களாக ஆக்கி வைத்தார்கள். அதாவது, சித்தர்கள் மேலே பட்டியலிட்டுக் காட்டிய எண்ணற்ற அறிவியல்களைக் கண்டுபிடித்து வளர்த்த போதும், அவற்றையெல்லாம் மதத்தின் பெயரால் புனிதமாக ஆக்கிய காரணத்தால் மனிதர்கள் தங்களது வெறியுணர்ச்சிகளின் அடிப்படையில் மேலே குறிப்பிட்ட கலைகளைப் பயன்படுத்தி பணமோ பதவியோ அதிகாரமோ, புகழோ தேடாதபடித் தடுத்திட்ட பெருமை சித்தர்களுக்கே உரியது. ஆனால், நாத்திகர்களும், பகுத்தறிவு வாதிகளும், கண்மூடித்தனமாகவும், காட்டுமிராண்டித் தனமாகவும் மதத்தைத் தாக்கியதால் மேலே குறிப்பிட்ட கலைகள் முழுமையாகச் சமுதாயத்திற்குப் பயன்படாமல் போய்விட்டன. எனவேதான், மத மறுமலர்ச்சிப் பணி நாத்திக வாதிகளுக்கும், பகுத்தறிவு வாதிகளுக்கும், மதமறுப்பாளர்களுக்கும், வெறுப்பாளர்களுக்கும் மதத்தைப் பற்றிய செய்திகளை அறிவியல் பூர்வமாக விளக்கியுரைப்பதில் ஆரம்பிக்கின்றது. இதன்மூலம், நாத்திக வாதிகளும், பகுத்தறிவு வாதிகளும் மனம் திருந்தி எந்த அறிவியலாக இருந்தாலும் அது மதத்தின் மூலம் புனிதப்படுத்தப் பட்டால்தான் எப்பொழுதும் ஆக்கத்திற்குரியதாக இருந்திட முடியும் என்ற பேருண்மையை உணரும்படிச் செய்ய முடியும். இம்மாபெரும் செயல்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ள நமது குருதேவருக்கு மனித இனமே என்றென்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றது.

14) நண்ப! இவ்வுலகில் தோன்றிட்ட மதங்களில் எந்தவொரு மதமும் ஏழைகள், பிச்சைக்காரர், நோயாளிகள், ஊனமுற்றோர் முதலியவர்கள் இல்லவேயில்லாத சமுதாயத்தைப் படைக்க வேண்டுமென்று கூறவேயில்லை. ஆனால், இப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தைப் படைக்க வேண்டுமென்று எல்லா சித்தர்களுமே கூறியிருக்கிறார்கள். சித்தர்கள் பாட்டாளி வர்க்கத்தை, உழைப்பாளி வர்க்கத்தை, வறுமையால் வாடும் அப்பாவி மக்களை மறைமுகமாகச் சுரண்டியும், ஏமாற்றியும் உண்டு கொழுப்பதை வன்மையாகக் கண்டிக்கிறார்கள். நேரடியாகக் கண்டிக்கிறார்கள். இதனை, 'மனித வாழ்க்கைக்குத் தேவையான எந்தப் பொருளையும் எவரும் தேவைக்கதிகமாகச் சேர்த்து வைக்கக் கூடாது; எவரும் மற்றவரின் உழைப்பை இனாமாகவோ, உரிய மதிப்பினைக் கொடுக்காமல் பெறவே கூடாது; பசித்திருப்பவர்களை புசித்து வாழும் மனித விலங்குகள் ஈவுஇரக்கமின்றி பொதுமன்றில் நிறுத்திக் கொல்லப்பட வேண்டியவர்கள்; நிலங்களையும் மாடுகளையும் மிகுந்த அளவில் சிலர் தங்களுக்குரியவைகளாக ஆக்கிக் கொள்வதைத் தடுக்கவே அரசு இருக்கின்றது. அதன் செயல்பாட்டுக் குறைபாட்டால் செல்வர்கள், பணக்காரர்கள், பெருநிலக்கிழார்கள், சிறுநிலக் கிழார்கள், சிற்றரசர்கள், பெருவேளிர்கள் முதலியவர்கள் தோன்றாமல் காப்பவர்களே வேந்தர்களாவார்கள்; வறுமையால், நோயால், உடலூனத்தால், சோம்பலால் இரப்போர்கள் உருவாகாமல் கருவிலேயே அழித்து விடவேண்டும்' என்று தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் குருவாசகங்களிலும், குருபாரம்பரிய வாசகங்களிலும்,, மற்றநூல்களிலும்

வெளியிட்டிருப்பதே போதும், சித்தர்கள் சிறந்த பொதுவுடைமைவாதிகள் என்ற பேருண்மையை விளக்கிடும். இதுபோன்ற எண்ணிறந்த வரலாற்றுப் பேருண்மைகளே, இந்துமத மேன்மைப் பேருண்மைகளே உலகுக்கு விளக்கியுரைக்கும் அரிய, பெரிய, உயரிய, நேரிய, சீரிய பணியில் ஈடுபட்டிருப்பவரே நமது குருதேவர். தமிழர்களின் சித்தர்நெறி யென்னும் தத்துவமே பிற்காலத்தில் வெளியுலகத்தாரால் இந்துமதம் என்று பெயரிடப் பட்டுவிட்டது என்ற மிகச் சிறந்த உண்மையை உலகுக்கு விளக்கி நிலைநாட்டுவதன் மூலம் தமிழினம், தமிழ்மொழி, தமிழ்நாடு என்னும் முக்கோணக் கோட்டைதான் மனித நாகரிகத்தையும், பண்பாட்டையும் கட்டிக்காத்து வந்திருக்கின்றது என்ற பேருண்மையை உலகம் உணரும்படிச் செய்து வருபவரே நமது குருதேவர்.

15) நண்ப உலகிலுள்ள எல்லா மதங்களுமே தாங்கள் குறிக்கும் கடவுள் எப்படிப்பட்டவர்? அவரது வரலாறு என்ன? வாழ்க்கை என்ன? கண்டவர்கள் விண்டுரைத்த தத்துவங்கள் யாவை? அன்றாட வாழ்க்கைக்குக் கடவுள் எப்படிப் பயன்படுகிறார்? சமுதாய வாழ்வுக்கும் அரசியலமைப்புக்கும் மேலே குறித்த கடவுள்களும் அவரைப் பற்றிய தத்துவங்களும் சித்தாந்தங்களும் எப்படி யெப்படிப் பயன்படுகின்றன? என்பன போன்ற வினாக்களுக்கு அரைகுறையான விடைகளேயே தருவனவாக இருக்கின்றன. இக்குறைபாடுகளே பயன்படுத்திக் கொண்டுதான் நாத்திகவாதிகளும் பகுத்தறிவுவாதிகளும் வளர்ச்சி பெற்றுவிட்டார்கள். ஆனால், மேலே குறிப்பிட்ட அனைத்து வினாக்களுக்கும் அறிவியல் பூர்வமான, முறையான, முழுமையான பதில்களைத் தரக்கூடிய ஒரேமதம் இந்துமதம் எனப்படும் சித்தர்நெறியே ஆகும். நாத்திகவாதிகளையும், பகுத்தறிவு வாதிகளையும் திருத்தக்கூடியது இந்துமதம்தான் என்பதில் ஐயமே இல்லை. மதம் என்னும் ஒரு துறையால் மனித இனம் புனிதப்பட வேண்டும், இனிமைப்பட வேண்டும், அமைதிப்பட வேண்டும், நிம்மதிப்பட வேண்டும், நிறைவடைய வேண்டும் என்றால் சித்தர்நெறியே உலகம் முழுவதும் பரவி ஆக வேண்டும். இக்கருத்தை உலகத்தார் உள்ளமெல்லாம் ஏற்குமாறு செய்தால் போதும், நமது குருதேவரின் எல்லா முயற்சிகளும் மாபெரும் வெற்றியினைப் பெற்றிடும். எனவே, நமது தலையாய முதற்கடமை நமது குருதேவரையும் அவரது கருத்துக்களையும், சாதனைகளையும், செயல்திட்டங்களையும் விரைந்தும் விரிந்தும் பரப்புவதேயாகும்.

16) நண்ப, இனியும் அஞ்சலை நீட்டிக் கொண்டு செல்ல விரும்பவில்லை நான். தங்களின்பொருட்டு எழுத ஆரம்பித்த இந்த அஞ்சல் மிக மிகப் பெரிதாகவும், அரிதாகவும், சீரியதாகவும், சித்தர்நெறிக்கே உரியதாகவும் அமைந்து விட்டது. இது திருவருளாலும் குருவருளாலும் நிகழ்ந்த ஒன்று என்றே கருதுகிறேன். இதனை, 'இந்துமதம் ஒரு பகுத்தறிவு மதம்' என்ற தலைப்பில் அச்சிட்டு வெளியிடுங்கள் அல்லது ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நகல் எழுதி பலருக்கும் அனுப்புங்கள்.

சித்தரடியான்
வெட்டுடையார்காளி சன்னிதானம்

"... உலக முதல் மதம், அனைத்து மதங்களின் தாய் சித்தர் நெறி = தமிழர் நெறி = திராவிட நெறி = இந்திய நெறி = இந்துமதம். இதனை உலகம் மறக்க, துறக்க நேரிட்டது இந்துக்களின் ஒற்றுமை இன்மையால்தான்.

63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும் சாதிக்காததை 64வது நாயனார் தமிழினத் தலைவர், தந்தை பெரியார், ஈ.வெ.ரா. சாதித்துள்ளார். அவரை மக்கள் மறக்கும் முன் சமய விழிச்சி, சமுதாயப் புரட்சி, அரசியல் மறுமலர்ச்சி உருவாக வேண்டும். அதற்கு, நம்மவர்களின் ஒற்றுமைதான் மிகமிக இன்றியமையாதது. எச்சரிக்கை! தமிழகம்தான் இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் தலைமையேற்று, வழிகாட்டிச் செல்ல வேண்டும். பொருளுலக இருள்கள், இன்னல்கள், சுரண்டல்கள், கொள்ளைகள், சர்வாதிகாரங்கள், மடமைகள், ஏக்கங்கள், தேக்கங்கள், துக்கங்கள், ஏமாற்றுக்கள், வறுமைகள், தவறுகள்....... அனைத்தும் அருளுலகச் சாதனைகளால்தான் அகற்ற முடியும். அனைத்தையும் அன்புவழியில், அறவழியில், அமைதிவழியில், சமாதான வழியில், மென்மைவழியில், இறையருளால் சாதிப்போம்! சாதிப்போம்! சாதிப்போம்!

வேற்றுமைகளை மறந்து ஒற்றுமைப்படுங்கள். நாம் வளரும் இயக்கம் - கட்டுப்பாடும், ஒற்றுமையும், பணிவும், துணிவும், கனிவும் தேவை! தேவை! தேவை! ... ... "

**[16-8-82இல் குருதேவர் மதுரை அடியான்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்து]**

## பரஞ்சோதி சாமிகளின் கேள்விகளும் குருதேவர் எழுதிய பதில்களும்.

From

அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம்,

To

அருள்மிகு குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரார்

காரியேந்தல்பட்டி
22-1-1981

பேரருள் வள்ளல் குருமகாசன்னிதானம் குருதேவர் அவர்களுக்குப் பணிவுள்ள சித்தரடியான் பணிவுடன் எழுதிய அஞ்சல். அடியேனும் மற்ற அனைவரும் நலம்.

1) 82வது பருவபூசையும், சனீசுவரர் தேவாலய யாகமும் இனிது நிறைவேறியது.

2) நமது தாத்தா வரலாறு நூலைக் கொட்டாம்பட்டி வட்டார R.D. அவர்களிடம் படிக்கக் கொடுத்திருந்தோம். அந்த நூல் அவர் மூலமாக மேலூர் வட்ட வட்டாட்சியர் அலுவலர் அவர்களுக்குக் கிடைக்க அவர் மூலம் ரெவின்யூ போர்டைச் சார்ந்த பலரும் படித்திருக்கிறார்கள். வட்டாட்சியாளர் உட்பட அனைவருமே நல்ல தெய்வீக ஞானம் உள்ளவர்கள், கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் என்பதால், அந்த நூலை மிகவும் பயன்படுத்தி, வரிக்கு வரி, வார்த்தைக்கு வார்த்தை சுவைத்து, ஆராய்ந்து படித்திருக்கிறார்கள். அந்த நூல் அவர்கள் மூலம் மிகவும் சத்தி வாய்ந்த சத்தி உபாசகர் ஒருவருக்குக் கிடைத்திருக்கிறது. அவர், இவர்களையெல்லாம் விட மிகவும் ஆராய்ச்சி, அருள், தெய்வீகக் கண்ணோட்டத்துடன் படித்திருக்கிறார். அவரை வெகுவாக ஈர்த்திருக்கிறது. அவர் தேவி உபாசகராக இருந்து சிவசத்தி நிலையம் மூலம் அருட் தொண்டு செய்து வருகிறார். நல்ல அறிவாற்றலும், அருளாற்றலும், வேதாகமப் பற்றும், சாத்திற, தோத்திற, எந்திற அறிவும் நிரம்ப உள்ளவர். நல்ல ஞானமும், பெரிய பெரிய அதிகாரிகளின் தொடர்பும் கொண்டவர். குறிப்பாக தமிழகமெங்கும் நல்ல செல்வாக்கும், அருள்வாக்கும் ஞானத்தெளிவும் கொண்டவர். அவரின் முகவரி:

அருள்மிகு தேவி உபாசகர் கு.ப.பரஞ்சோதி சாமிகள், சிவசத்தி நிலையம், வேடசந்தூர் (மதுரை மாவட்டம்)

அவர் தற்போது சத்தி சக்கரம், அதாவது அம்பாள் சக்கரம் வைத்து முறைப்படி பூசைகள் செய்து வருகிறார். கருவூரார் வரலாறு படித்தவுடன் நன்னம்பிக்கையுடன் சித்தர் நெறித் தத்துவத்தை அதிலும் கருவூரார் பாரம்பரிய பெருமை உலகுக்கு அதிலும் முதலில் குறிப்பாக நம் தமிழகத்தில் பரப்பத் தாம் பெரிதும் விரும்புவதாகவும் அதற்குக் குருவருளும் திருவருளும் கிடைக்க வேண்டும் என்றும் விரும்புகிறார். இதில் உள்ள [கருத்துக்களை] நன்கு அறிய வேண்டுமெனவும், அதன்பின் எல்லா இடங்களிலும் கொள்கைகளைப் பரப்ப வேண்டும் என்றும், கொள்கைப் பற்றுடன் குறிக்கோள் தெளிவுடன் கூறினார். அதனால் ஒரு சில விளக்கங்களைப் பெற விரும்புகிறார்.

1. “குருதேவரைத் தாம் நேரில் பொன்னேரியிலோ அல்லது அம்பத்தூரிலோ சந்தித்து நன்கு கொள்கை விளக்கம் தெளிவுறுதல் வேண்டும். அதற்கு வீரமகாளி சன்னிதானம் எல்லா வழிவகைகளையும் வகுத்துக் கொடுக்க வேண்டும்.”
2. “சித்தர் கருவூரார் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் கருவூராரின் விந்துவழி வாரிசு என்பதற்கான வெளிப்படையான ஆதாரங்கள் இருக்கின்றனவா? நான் நம்பினால்தான், துணிந்து வெளியிட இயலும். கருவூராரைப் பற்றி இவ்வளவு அரிய செய்திகளைப் பரப்ப என்றால் முடியும். அகந்தையினால் கூறவில்லை. உண்மைநிலையையே கூறுகிறேன்”.
3. “தங்களுடன் சேர்ந்து அருட் தொண்டு புரிய அருள வேண்டும்.”
4. “இவ்வளவு கருத்துக்களும் எந்தக் கல்வெட்டில், எந்த ஏடுகளில் இருக்கின்றன? நாளைக்கு ஒருவர் ஆதாரம் கேட்கும்போது நாம் மெய்ப்பிக்க வேண்டும். வாய்ச்சொல்லால் மட்டும் முடியாது. ஏதாவது ஆதாரம் உண்டா? அப்படிப்பட்ட ஆதாரங்களை நாம் பொதுவாக்க இயலுமா?”
5. “இங்கே கூறப்படும் சொற்களெல்லாம் எந்த இலக்கியத்திலும் காணப்பட வில்லையே! இந்தச் சொற்கள் உண்டான வரலாறு இருக்கின்றதா?”
6. “இவ்வளவு மிகப்பெரிய தத்துவங்களையும், உண்மைகளையும், செயல்திட்டங்களையும் வைத்துக்கொண்டு ஏன் வெளியிடவில்லை? வெளியிடுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகிறதா? அல்லது வெளியிட விருப்பம் இல்லையா? நான் எந்தக் கேள்வியையும் வாதம் விவாதம் கருதிக் கேட்கவில்லை. இப்படிப்பட்ட அரிய பெரிய தத்துவத்தைப் பரப்பப் போகுமுன் நல்ல தெளிவும் அறிவும் நம்மிடத்திருக்க வேண்டும் என்பதற்காகவே கேட்கப் படுகின்றன. தயவு செய்து தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.”
7. “கருவூராருடைய பூசைமுறைக்கும், மற்ற சித்தர்களின் பூசைமுறைக்கும் என்ன வேறுபாடு? ஒற்றுமை? கருவூராரின் பூசை முறைகளால் சமுதாயத்துக்கு நலம் கிட்டுமா? எந்த வகையில்?”
8. “கருவூரார் வரலாறு வைத்திருப்பது போல், மற்ற பதினெண்சித்தர்களுக்கு எல்லாம் வரலாறு உள்ளதா....?”

என்று பல கேள்விகளைக் கேட்டு அதிகம் அறிய விரும்பினார். தாம் நல்ல தெளிவு பெற்று விட்டால் தம்மைச் சார்ந்த அத்தனை பேரையும், சித்தர் கருவூரார் இயக்கப் பணியில் ஈடுபடுத்த சித்தமாயுள்ளேன் என்று கூறினார். தாம் சித்தர் பின்னால் தொண்டாற்ற அம்பாள் சத்தி மனம்

கொள்வது உண்மை என்றால், சித்தரிடமிருந்து அம்பாளின் ஆணை வரும். ஆத்தாளே வந்து அழைக்கட்டும் என்று உணர்ச்சி பொங்கக் கூறினார். அருள்மிகு பரஞ்சோதி முனிவர் அவர்கள் நமது சுப்பராயன் போன்று நல்ல ஆற்றல் படைத்த, அநுபவ அறிவு மிக்கவர். வட்ட ஆட்சியர் அவர்களும் அதிகம் விரும்புகிறார்கள். ஆத்தாளே தன்னை வணங்கும் அவரை நமது இயக்கத்தின் [தொடர்புக்கு அவரை அழைத்து வந்திருக்கிறார்கள் போலும்].. ... ... ....

1.2.81

வரையுநர்:

குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரார்
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி
அரசயோகி, இராசிவட்ட நிறைவுடையார்

பெறுநர்:

அருள்மிகு 'நவநாத ஞானி'
தேவி உபாசகர் கு.ப.பரஞ்சோதிசாமிகள் அவர்கள்
சிவசத்தி நிலையம், வேடசந்தூர், மதுரை மாவட்டம்

வழி: அருள்மிகு, அருள்மழை, திருமந்திர ஓலைநாயகம், பத்தர், பத்தியார், போத்தர், போத்தியார், (புத்தர்), பதினெண்சித்தர் சிவசத்தி பீடம் அவர்கள்.

தொடர்பு: 22.1.81ஆம் நாளிட்ட காரியேந்தல்பட்டி சித்தரடியான் அஞ்சல்.

1. 'நவநாத ஞானி' எனும் தரமிகு, தவச்செல்வர் கு.ப.பரஞ்சோதி சாமிகள் தம் விருப்பப்படி எப்பொழுது வேண்டுமானாலும் எம்மைக் காண வரலாம்.

a) குருபாரம்பரிய முறைப்படி துணிகள், உணவுப் பொருட்கள், காணிக்கை, ... கொண்டுவர வேண்டும்.

b) முன்கூட்டியே நாளும் நேரமும் குறித்துக் கொள்தல் நலம்.

c) இரண்டாவது புதிய சன்னிதானம் பிறந்த 48 நாட்களுக்குள் வந்தால் 'அருளாட்சி ஓலை நாயகம்' என்ற தகுதி பெறலாம்.

d) ஓரிரு மாதங்களுக்கு அன்றாடம் அம்பத்தூர் திரும்புவோம். சனி, ஞாயிறு விடுமுறையில் சந்தித்தல் நலம்.

e) வீரமாகாளி சன்னிதானம் உடன் வருதல் சிறப்பு, நல்லது.

f) கொள்கை விளக்கம் பெறுவதற்குக் கோப்புக்களையும், நூல்களையும்தான் படிக்க வேண்டும். அல்லது எம்மைச் சொற்பொழிவு நிகழ்த்தவும், அருளாளர் அவையில் உரையாடல் நிகழ்த்தவும் அழைக்க வேண்டும். == அதாவது நேரிடை சந்திப்பில் கொள்கை விளக்க உரையாடல் தேவையில்லை == 'காட்சியே அனைத்துக்கும் சாட்சியாகும், வாய்ச்சொல் தேவையில்லை', என்ற குருவாசகம் புரிய வேண்டும். இல்லையேல், சந்திப்பில் சலிப்பு, புளிப்பு, அலுப்புத்தான் மிஞ்சும். எச்சரிக்கை.

2. சித்தர் கருவூராரின் வாரிசாகத்தான் யாம் உள்ளோம் என்பதை எமது சொல்லும், செயலும் விளக்குவதை விட வேறு வெளிப்படைச் சான்று தேவையில்லை. பெரிய கோயிலில் உள்ள சிலை 'கருவூரார்' என்ற பெயர் கூட வெட்டப்படாமல், சான்றில்லாமல்தான் உள்ளது. எம் தாய், தந்தையர் எமது பிறப்புப் பற்றிக் கூறியதும், யாம் அதற்கேற்பக் கற்று, நோற்று, பெற்று, உற்று, .... அடைந்தவையுமே போதுமான சான்றுகள். கருவூரார், கருவூர்த்தேவர், திருமாளிகைத்தேவர் ... என்று பரம்பரை விளக்கமும், குருபாரம்பரியமும், குருவாசகமும் தேவைக்கதிகமான சான்றுகளையும், ஊன்றுகளையும் வழங்கும்.

3. யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும், எம்மோடு சேர்ந்து அருட்தொண்டு புரியலாம். ஆனால், எம் போக்கும், நோக்கும், நடைமுறையும், ஊக்கும், கிடக்கையும் ... இன்றைய உலகியலுக்குப் புறம்பாக, முரணாக, ஒவ்வாததாக, ஏற்க முடியாததாக, பிழையுடையதாக, அச்சத்துக்குரியதாக, ஐயம் விளைவிப்பதாக இருக்கும். இவற்றை ஆரம்பத்திலேயே தெரிந்து, சிந்தித்து, முழுமையான, திடமான, நம்பிக்கையுடன் எம்மைப் பின்பற்ற வேண்டும். எம்மோடு சேர்ந்திடல் வேண்டும்.

'எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு' -திருக்குறள்

"துணிந்தார்க்குத் துக்கமுமில்லல, தூக்கமுமில்லை,
ஏக்கமுமில்லை, தேக்கமுமில்லை"

-கருவூராரின் குருவாசகம்

எம்மோடு சேர்ந்தபிறகு, எவ்விதச் சிந்தனையுமின்றி, யாம் சொல்லுவதை மட்டும் அப்படியே செயலாக்கும் பக்குவமிருப்பின் எம்மோடு சேரலாம். எம்மோடு சேர்ந்தபிறகு, எம்மைக் குறைகூறிக் கறைபடுத்திச் செல்லக் கூடாது. -எச்சரிக்கை.

4. யாம் கல்வெட்டு ஆராய்ச்சியில் இறங்கவில்லை. எண்ணற்ற ஏடுகள் பல இடங்களில் உள்ளன. அவை பற்றி இதுவரை கவலைப்பட்டதில்லை யாம். எதையும் மெய்ப்பிக்கக் கல்வெட்டும் ஏடும் தேவையில்லை. அதாவது,

"எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்.
படித்தவன் பாட்டைக் கெடுத்தான்"

-சித்தர் கருவூராரின் குருவாசகம்.

என்ற அருள்வாசகத்தைப் புரிந்தவர் கல்வெட்டும், ஏடும் மெய்ப்பிக்கத் தேடார். சித்தர் பாரம்பரியம் ஏட்டுச் சுரைக்காயல்ல; புள்ளிக்கு உதவாத பள்ளிக் கணக்கல்ல. இன்றைக்கும் சரி, என்றைக்கும் சரி, யாமும் எம்மால் உருவாக்கப் படுபவர்களும் பதினெண்சித்தர்களின் சாதனைகளை மெய்ப்பிப்பவர்களாகவே இருப்போம். "புறச்சான்று மட்டுமின்றி, அகச்சான்றும் காணலாம்.

அருள்நெறியில் வாரீர், வாரீர், ...” என்றழைக்கும் தத்துவமே சித்தர் நெறி!

எம்மோடு சேர்ந்து தொண்டாற்றுவது என்பது, எம்மால், உருவாக்கப் படுபவர்களோடு சேர்ந்து தொண்டாற்றுவது என்றே பொருள்படும். அதாவது, ‘திருவே குரு’, ‘குருவே கருவறை மூலவர்’, ‘கருவறை மூலவரே எழுந்தருளி’, ‘எழுந்தருளியே அடியார்கள்’ -என்ற குருவாசகக் கருத்துக்களை உணர்ந்து, ஒப்புக் கொண்டு, செயல்படுத்தலே எம்மோடு சேர்ந்து தொண்டாற்றுவதாகும்.

5. யாம் பயன்படுத்தும் சொற்களெல்லாம், சித்தர்களின் நூல்களைப் பயின்றதிலும், செவிவழிச் செய்திகளாக உள்ளவைகளை மனப்பாடம் செய்ததிலும், சித்தர்களின் பூசாவிதிகள், கருவறைப்படிகள், குருமார் ஒழுக்கம், குடமுழுக்கு நூல், எழுந்தருளி உயிர்ப்பு நூல், எந்திற உயிர்ப்பு நூல், ஏந்தர உயிர்ப்பு நூல், ஆகமம், மீமாம்சை, உபநிடதம், சூத்திறம், சூத்தரம், அத்திற ஓச்சு, குருவாக்கு, குருபாரம்பரியம், அரச பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், சாத்திறம், சாத்தரம், தோத்திறம், தோத்தரம், ... முதலான எண்ணற்ற குடும்ப வழிச் சொத்துக்களாக உள்ள இலக்கியங்களைப் பயின்றதிலும் ... எமக்குக் கிடைத்தவை. எம்மால் தமிழ்மொழிக்குப் பல நூறாயிரம் சொற்களும், சில ஆயிரம் நூல்களும், பலநூறு கலைகளும், தெளிவான காலக் கணக்கிட்டுடன் கூடிய வரலாறுகளும் கிடைத்திடும். இவற்றை எம்மைத் தவிர வேறு யாராலும் வழங்க முடியாது. எனவே, இக்காலத்தவர் எம்மைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டால், தமிழ்மொழிக்கும், தமிழ் இனத்துக்கும், தமிழ் நாட்டுக்கும் என்றென்றும் ஈடு செய்ய முடியாத மாபெரும் ‘நட்டம்’, ‘இழப்பு’, ‘குறை’ ஏற்பட்டே தீரும். எனவேதான், யாம் பொறுமையோடு, எல்லா நாளேடு, வார ஏடு, பதிப்பகங்கள், ... முதலியவற்றிற்கும், தமிழைக் காப்பதாக வளர்ப்பதாகத் ‘தம்பட்டம்’, ‘வாய்ப்பறை’ அடித்துத் திரியும் அரசியல்வாதிகள், இலக்கியவாதிகள், கலைஞர்கள், மதவாதிகள் ... முதலியோருக்கும் தொடர்ந்து எம்மைப்பற்றி அறிவித்து எம்மைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கூறி வருகிறோம். இதுவரை பயனில்லை. எல்லோருமே ஏறத்தாழக் கூலிகளாக, போலிகளாக, ஏமாற்றத் தெரிந்த தந்திரசாலிகளாக இருக்கிறார்கள்.

தமிழர்கள் தங்களது கலைகளையும், தலைவர்களையும், பாரம்பரியக் கூறுபாடுகளையும், மரபுவழிச் செல்வங்களையும், வரலாறுகளையும், இலக்கியங்களையும், ... போற்றிப் பேணத் தெரியாதவர்கள். அதனால்தான், இன்றைக்கு மட்டுமல்ல, என்றைக்குமே இருட்டறைப் பொருட்களாக, ‘பூதம் காக்கும் புதையல்’களாக இருக்க வேண்டிய விதி ஏற்பட்டிட்டது. இவற்றை மாற்றும் மாபெரும் பணியையே யாம் துவங்கியுள்ளோம்.

யாம், எம்மைவிட எமது பணிகள் பலகோடி மடங்கு பெரியவை, அரியவை, சீரியவை, உயரியவை, ... என்பதனை நன்கு உணர்ந்து உள்ளோம். எனவேதான், யாம், அளவுக்கதிகமான அடக்கத்தோடும், அச்சத்தோடும், கூச்சத்தோடும், எச்சரிக்கையோடும், பொறுமையோடும், ... அமைதியாகச் செயல்பட்டு வருகிறோம். எங்கேயாவது, எப்போதாவது யாம் நிதானம் இழக்க நேரிட்டிடலாம் என்ற அச்சத்தால்தான் யாம் நேரிடையாக சமுதாயத்தை சந்திக்காமல் எம்மால் உருவாக்கப் படுபவர்களின் மூலமே சமுதாயத்தைச் சந்திக்கிறோம். அதற்காகத்தான் தமிழர்களின் பழம்பெருமைகளையும், உரிமைகளையும் விளக்கக்கூடிய சான்றுகளாக வழக்கற்ற செந்தமிழ்ச் சொற்களையும் தேடிப் பிடித்துப் பயன்படுத்தி வருகின்றோம்.

“.... ... புதைபொருள் ஆராய்ச்சியால் கிடைக்கும் பல நூறு வகைப்பட்ட நாணயங்களையும், கலைப்பொருட்களையும், கல்வெட்டுக்களையும் விட ஒரு பழைய சொல் (... an ancient word is more valid than hundreds of archeological findings ...) மிகமிக மதிப்பும் பயனும் உடையதாகும் ...” என்ற வரலாற்று வல்லுநர் கருத்தை அடிப்படையாகக் கொண்டே யாம், மறக்கப்பட்ட, இறந்து விட்டதாகக் கருதப்பட்ட வழக்கொழிந்த நிலையெய்தி விட்ட பொருள் புரியாத் தன்மை பெற்றிட்ட ... சொற்களையெல்லாம் வெளிப்படுத்தும் மாபெரும் பணியைப் பேச்சிலும் எழுத்திலும் நிலைநாட்டுகிறோம்.

மருத்துவத் துறை (Medical Field), இசைத்துறை (Field of Music), வானியல் துறை (Astronomy), கணிதத் துறை (Mathematics), சிற்பத் துறை (Sculpture), ஓவியத் துறை (Paintings), கட்டிடக் கலை (Architecture), உள்நாட்டு அயல்நாட்டு வாணிபத் துறை (Internal and External Trade), போர்த்துறை (Warfare), அரசியல் துறை (Politics), சமுதாயத் துறை (Sociology), சமயத் துறை (Religion), இலக்கியத் துறை (Literature), பயிரின உயிரின துறை (The Flora and Fauna), ... முதலிய பல்வேறு துறைகளில் பழந்தமிழர்கள் சாதித்துள்ள சாதனைகளை விளக்கும் சான்றுகளாகவும், ஊன்றுகளாகவும் (Proofs and Evidences) உள்ள ‘பைந்தமிழ்ச் சொற்களை’, ‘வண்டமிழ்ச் சொற்களை’, ‘தீந்தமிழ்ச் சொற்களை’, ‘ஒண்டமிழ்ச் சொற்களை’, ‘செந்தமிழ்ச் சொற்களை’, ‘அமிழ்தத் தமிழ்ச் சொற்களை’, ... எல்லாம் தேடித் தேடி வெளிப்படுத்திக் கொண்டுள்ளோம் யாம்!

எமது எழுத்துக்களில் நிலைத்த வடிவம் பெற்றுவிட்ட நூறாயிரக்கணக்கான தமிழ்ச்சொற்கள்தான், ‘தமிழினம்’, ‘தமிழ்மொழி’, ‘தமிழ்நாடு’ எனும் முக்கோணக் கோட்டையை வலிமைப் படுத்தும், வளப்படுத்தும், வாழ்வுறுத்தும், பொலிவுறுத்தும் இச்சொற்கள் பலநூறு

சித்தரடியான்களே, சித்தரடியார்களே, சித்தரடியாள்களே உருவாக்கியிருக்கின்றது. இனியும் உருவாக்கப் போகிறது. எனவே, தாங்கள் எம்முடைய சொற்கள் எந்தெந்த இலக்கியங்களில் இருக்கின்றன என்று தேடித் திரிய வேண்டாம். இச்சொற்கள் எல்லாம் தமிழினத்தைக் காத்திட்ட, காத்திடுகின்ற, காக்கப் போகின்ற கூர்மையும், உரமும், உறுதியும், ஆற்றலும் மிக்க போர்க்கருவிகளாகும். எனவே, இவற்றை மீண்டும் பழக்கத்துக்குக் கொண்டு வரும் பணியில் பங்கு பெற வாரீர்! வாரீர்!! வாரீர்!!! அல்லது எம் பணிக்கு ஆதரவு தாரீர்! தாரீர்!! தாரீர்!!! -என்று அறிவிப்பழைப்பு விடுக்கின்றோம் யாம்.

6. “... இவ்வளவு மிகப் பெரிய தத்துவங்களையும், உண்மைகளையும், செயல் திட்டங்களையும் வைத்துக்கொண்டு ஏன் வெளியிடவில்லை? வெளியிடுவதற்கான முயற்சிகள் எடுக்கப் படுகிறதா? அல்லது வெளியிட விருப்பமில்லையா? ...”

மிகச் சுலபமாக, எளிதாக ... இக்கேள்விகளைக் கேட்டு விட்டீர்கள். அநேகமாக, தமிழகத்திலுள்ள விளம்பரம் பெற்ற எல்லாத் தலைவர்களும், நாளேடுகளும், வார ஏடுகளும், பதிப்பகங்களும், ... எம்மையும், எமது செயல்திட்டங்களையும், கொள்கைகளையும், குறிக்கோள்களையும் நன்கு அறிவர். யாம், எம்மை அறிமுகப் படுத்திச் சித்தர் நெறியினை வெளிப்படுத்த எடுத்த முயற்சிகளை விளக்கும் நூற்றுக் கணக்கான அஞ்சல்களின் நகல்கள், கோப்புக்களில் தூங்குகின்றன. மடாதிபதிகள், புராணச் சொற்பொழிவாளர்கள், இலக்கிய பேச்சாளர்கள், சமுதாயச் சீர்திருத்தவாதிகள் ... முதலிய அனைவரின் முகவரிகளுடன் தேதி குறிப்பிடப்பட்ட ஏராளமான அஞ்சல்களையும், மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி (625103) காரியேந்தல்பட்டியில் இருக்கும் அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் சித்தரடியான் ஆசிரியர் நெ.சேவுகன் இல்லத்திலும் பூசையறையிலும் காணலாம்.

எம்மால் எழுதப்பட்ட நூறாயிரக் கணக்கான அஞ்சல்களும், ஆயிரக் கணக்கான கட்டுரைகளும், நூற்றுக் கணக்கான நூல்களும் எழுத்து மங்கியும், தாள் நைந்தும், செல்லுப் பூச்சி உண்டும் ... சிதைந்து அழிந்து கொண்டே இருக்கின்றன. அவற்றைக் காப்பதற்குக் கூடப் போதிய வசதி வாய்ப்புக்களின்றி

“இனி என் செயலாவது ஏதுமில்லை
இனி யெல்லாம் உன் செயலென்று உணரப் பெற்றேன்
ஊனெடுத்த இப்பிறப்பில் [உனையன்றி] உருவாவது ஏதுமில்லை
ஏனெடுத்தோம் இப்பிறவியென எண்ணிச் செயல்படலே நன்று”

-என்ற தத்துவப் பாடலுக்குப் பொருளாகவும் விளக்கமாகவும் அமைதியாக செயல்படுகிறோம் யாம்.

7. “... கருவூராரின் பூசைமுறைக்கும் மற்ற சித்தர்களின் பூசைமுறைக்கும் என்ன வேறுபாடு? ஒற்றுமை? கருவூராரின் பூசைமுறைகளால் சமுதாயத்துக்கு நலம் கிட்டுமா? எந்த வகையில்? ...”

பல ஆண்டுகள் எம்மோடு பழகியும், பல நூல்களைப் பயின்றும், பல பயிற்சிகளைச் செய்தும், பல இடங்களுக்குச் சென்று எம்மால் உருவாக்கப் பட்டவர்களைச் சந்தித்து உரையாடியும் ... அறியப்பட வேண்டியவைகளை இப்படி அடுக்கடுக்காக வினாக்களை எழுப்பி விடையாகப் பெறவே முடியாது! முடியாது!! முடியாது!!! இயலவே இயலாது! இயலவே இயலாது!! இயலவே இயலாது!!!

சித்தர் கருவூராரின் பூசைமுறைகள் “இரவில் வழிபாடு செய்வதையே” (Worship during Night Time) அடிப்படையாகக் கொண்டவை. மற்ற சித்தர்களின் பூசைகள் பெரும்பாலும் பகலில் வழிபாடு செய்வதையே [Worship during Daytime) அடிப்படையாகக் கொண்டவை.

எல்லாச் சித்தர்களுமே, ‘உயிர்ப்பலி’, ‘இறைச்சியுணவு’, ‘நெருப்பு வழிபாடு’, ‘இயற்கையிலுள்ள பயிரின உயிரின வழிபாடு’ (The Worship of Flora and Fauna), முன்னோர் வழிபாடு (Ancestors’ worship), வீர வழிபாடு (Hero Worship) முதலிய வழிபாட்டு ஒற்றுமையைப் பெற்றுள்ளனர். பத்தி, சத்தி, சித்தி, முத்தி என்ற நான்கு நிலைகளை எல்லாச் சித்தர்களுமே வலியுறுத்துகிறார்கள். ‘உருவ வழிபாடு இல்லாமல் எப்பயனுமே ஏற்படாது’ என்ற கொள்கைதான் சித்தர்களின் உயிர்நாடியான கொள்கை.

எல்லாச் சித்தர்களுமே ‘இறைவர்கள்’, ‘கடவுள்கள்’, ‘ஆண்டவர்கள்’, ‘பட்டவர்கள்’, ‘தெய்வங்கள்’, ‘தேவதைகள்’, ‘தேவியர்கள்’, ‘தேவர்கள்’, ‘வானவர்கள்’, ‘விண்ணவர்கள்’, ‘அமரர்கள்’, ‘இருடிகள்’, ‘முனிவர்கள்’, ‘கணங்கள்’ ... என்று நாற்பத்தெட்டு வகையினர் வழிபடுநிலையில் (வழிபடப் படவேண்டிய தகுதி பெற்றவர்கள்) உள்ளனர் என்பதையும் ஒப்புக் கொள்கின்றனர்.

அத்துடன் மனிதர்கள்தான் படிப்படியாகத் தங்களது முயற்சியால் மேற்குறித்த நாற்பத்தெட்டு வகை நிலைகளையும் அடைகின்றனர் என்பதை ஒப்புக் கொள்கின்றனர். எனவே, மனிதனைக் கடவுளாகவே ஆக்கும் தத்துவம்தான் “சித்தர் நெறி”யாகும். இதுவே இன்றைய இந்துமதத்தின் கருவும், அடிப்படையும், உள்ளீடும் ஆகும்.

எல்லாச் சித்தர்களுமே, “குரு வழியாகத்தான் எல்லாவித பத்தி, சத்தி, சித்தி, முத்திகளைப் பெற முடியும்” என்ற கருத்துடையவர்களாவர். இவர்கள், சித்தர் நெறிக் கலைகளால், கல், மண், புல், உலோகங்கள், ... உயிரினம் ... முதலிய அனைத்தையுமே வழிபடக் கூடிய கடவுள்களாக ஆக்க முடியும் என்ற கருத்துடையவர்கள். இவர்கள் மெய்ப் பொருள் துறையில்

ஈடுபடுபவர்கள். ஐம்பத்தாறு வகைப் பட்டங்களைப் பெறுவதும், பதின்மூன்று வகைப்பட்ட திருவருட் செல்வர்களாகத் தேறுவதும்தான் சித்தர் நெறி காட்டும் 'சமயக் கல்வி' (Religious curriculam or Educational System) என்ற முடிவுடையவர்கள்.

"... சித்தர் கருவூராரின் பூசைமுறைகளால்தான் சமுதாயத்துக்கு நலம் கிட்டும்; அல்லது கிட்ட முடியும் ..." என்று கூறத்தான் முடியும் எம்மால். இது 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்பது போலல்ல! எமது அநுபவங்கள், சாதனைகள், எம்மால் உருவாக்கப் பட்டவர்களின் அநுபவங்கள், சாதனைகள்... முதலிய அனைத்துமே, 'சித்தர் நெறி' அல்லது 'சித்தர் கருவூராரின் பூசைமுறை' ... மனித இனத்தையே இனிமைப் படுத்தும் என்ற முடிவை வழங்குகின்றன.

சித்தர் கருவூரார்களில் ஒவ்வொரு பதினெண்சித்தர் பீடாதிபதியும் தம் காலத்தில் மாபெரும் சமய மறுமலர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, தனிமனிதர் செழுச்சி, குடும்பச் செழுச்சி, சமுதாயச் செழுச்சி, அரசியல் செழுச்சி, ... முதலியவைகளைப் புரட்சியால் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, அமராவதி ஆற்றங்கரைக் கருவூரார் சங்க கால இலக்கியங்களைக் காத்தும், பல்வேறு சமுதாய அமைப்புக்களை உருவாக்கியும் தமிழினத்தைக் காப்பாற்றினார். பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, காவிரியாற்றங்கரைக் கருவூரார் பிற்காலச் சோழப் பேரரசை உருவாக்கியும் (கி.பி.785-1279) உருவாக்கியும், (1877) ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தேழு பழம்பெரும் நூல்களைத் தொகுத்தும் அரச பாரம்பரியம் (Political History), இலக்கிய பாரம்பரியம் (History of Literature), குருபாரம்பரியம் (Religious History) ... ... ... ...

**(கட்டுரை நகல் முழுமையாகக் கிடைக்கவில்லை)**

## குருபாரம்பரிய வாசகங்கள்

"... ... ...

'உயிர் அழியாதது',

'உறவுகள், பிறப்புக்கள் தோறும் மாறலாம், மாறாது மிருக்கலாம்',

'பிறப்பிறப்பற்ற நிலைகளை அடைய முயல்வதும், முயலாததும், இப்பிறப்பின் ஆணவம், கன்மம், மாயை, ஆசை, கல்வி, முயற்சி முதலியவைகளால் அமைவதே.'

'அதனால், 'திருவும் குருவும் ஒன்று', 'குருவே அனைத்துக்கும் கரு', 'குருவில்லா வித்தை பாழ்', 'குருவழிக் காணலே உண்மைக் காட்சி', 'குருவழி பெற்றவைகளையே துய்க்க முடியும்', 'குருவே மெய்' என்பனவற்றை உணருங்கள்.'

'அருட்பள்ளியில் சேர்ந்துள்ளீர்கள் என்பதையே அருட்பட்டங்கள் உணர்த்துகின்றன. இனிப் பலகாலும் முயன்று மேற்கூறிய இறை, கடவுள், தெய்வம், தேவதை, அமரர், இருடி, ...... முதலியவர்களுடன் தொடர்பு கொண்டு பத்தி, சத்தி, சித்தி, முத்திகளைப் பெறுக.'

'ஆவி, ஆன்மா, மானுடநிலை, குடும்பநிலை எல்லாம் வளப்பட! வலிமையுற! பொலிவுபெற! வாழ்த்துகிறோம்.'

'உலகியல் மாச்சரியங்கள், ஆச்சரியங்கள், மயக்கங்கள், தயக்கங்கள், அச்சங்கள், கூச்சங்கள், இச்சைகள் கடந்து குருவைப் பற்றுக!' ... ... ..."

**[19-3-82இல் குருதேவர் எழுதிய கடித்தத்திலிருந்து]**





# ஆயுதப் புரட்சியல்ல! காகிதப் புரட்சி!

அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் அவர்களுக்கு பல்லவப் பெருமண்டலத்து குருவாணை ஓலைநாயகம் தொம்பரத்தம்மன் சன்னிதானம் எழுதுவது: உங்கள் மூலமாக மற்ற எல்லா சன்னிதானங்களுக்கும் அனுப்ப முற்படுங்கள்.

1) ஆத்தாக்கள் தாத்தாக்கள் அருளால் நலம்! நலமறிய அவா!

... ... ... ... ...

நான் வரும் பால்குடவிழாவில் குருதேவருடன் அங்கு வர முயற்சி செய்கிறேன். எல்லாம் ஆத்தாக்கள் தாத்தாக்கள் செயல். இதற்குமேல் எழுதப் போவது ஐயா சொல்லி நான் எழுதியது.

2) நம் இயக்கத்தில் உள்ள ஒவ்வொருவரும் குறைந்தது வாரம் ஒருமுறையாவது நமது இயக்கத்தின் கொள்கைத் துண்டு பிரசுரங்களை மக்களுக்குக் கொடுத்தால் நாம் யார் என்பதை ஓரளவாவது மக்கள் புரிந்து கொள்வார்கள். குருதேவர் ஆண்டுமலருக்கு முன் கூட்டியே அவரவர்களுக்குத் தெரிந்தவரிடம் முன்கூட்டியே புத்தக ஆர்டர் (order) பெற்றால் கூட மிக நன்றாக இருக்கும் என்று குருதேவர் நினைக்கிறார். நமது இயக்கத்தில் உள்ள அனைவரும் வாரம் ஒருமுறையாவது பொதுமக்களுக்கு மந்திரிக்க வேண்டும். அதில் அவர்கள் (அவரவர் விருப்பப்படி) கொடுக்கும் தொகையாவது இயக்க வளர்ச்சிக்கு உதவும். ஒருவன் சைக்கிளை வாங்கி அதை உபயோகப்படுத்தாமல் வைத்திருந்தால் அது துப்பு ஏறி உபயோகப் படாமல் போய்விடுமோ, அதுபோல் சன்னிதானப் பட்டம் பெற்றவர்கள் வாரம் ஒருமுறையாவது மந்திரிக்க வேண்டும். அப்பொழுதுதான் அது பயன் உள்ளதாக இருக்கும்.

3) என்னைப்போலவே பலரும் இ.ம.இ. பணிகளில் முழுமையாக ஈடுபட முடியாத போராட்ட நிலையில் வாழுவார்கள் என்பதை எண்ணிப் பார்த்தே 'என் தன்னிலை விளக்கமாக' இந்த மடலை எழுதுகிறேன். அதாவது, நம்மவர்களில் விலகிச் சென்றவர்களும் விலகியிருப்பவர்களும் பல்வேறு காரணங்களால் தற்காலிகமாகவே தாங்கள் விலகியிருப்பதாக உணரும் வண்ணமே நம்மவர்கள் நம்மோடு அறிமுகம் பெற்ற அனைவரோடும் தொடர்ந்து ஏட்டாலும் பேச்சாலும் தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால், நாம் தமிழினம், தமிழ்மொழி, தமிழ்நாடு உலக ஆதிச் சமயமான இந்துமதம் என்ற கட்டுக்கோப்பில் உலகம் தழுவிய மறுமலர்ச்சிப் பணிகளைச் செய்கிறோம். இதில் எல்லோருமே உரிமையோடும், பெருமையோடும் பங்கு எடுத்துக் கொள்ளும்படி செய்ய வேண்டியது நம் கடமை. இது அடியேனின் தாழ்மையான வேண்டுகோள்.

4) நாம் ஆயுதப் புரட்சிக்கு மக்களைத் தயாரிக்கவில்லை என்பதை அனைவரும் உணர்ந்து நம்பி நம்மோடு செயல்படச் செய்ய வேண்டும். இதற்காகத்தான் நமது குருதேவர் இரவு பகலாக எழுதிக் குவித்து காகிதப் புரட்சி செய்கிறார். இந்தக் காகிதப்புரட்சி வெற்றி பெற வேண்டுமென்றால், நம்மவர்களில் அழகான கையெழுத்து ஆற்றல் உடையவர்கள் குருதேவர் எழுதிக் குவித்துள்ளவைகளில் சிலவற்றையாவது அவ்வப்போது நகல் எடுத்து உண்மையான மனிதநல ஊழியர்கள் என்று கருதப்படுபவர்களுக்கு அனுப்பிடல் வேண்டும். இதுபோல் வாய்ப்பில்லாதவர்கள் நாம் அச்சிட்டு வைத்திருக்கக் கூடிய புத்தகங்களையும், அறிக்கைகளையும், மாத வெளியீடான குருதேவர் ஏட்டையும் கையில் எடுத்துக் கொண்டு புகைவண்டிநிலையம், பேருந்து நிலையம், திருவிழாக் கூட்டம், கோயில்கள், பிற பொதுக்கூட்டங்கள், ... முதலிய இடங்களில் நின்று ""இந்துமத மறுமலர்ச்சிக்காக', 'தமிழின விடுதலைக்காக', 'தமிழ்மொழியின் உரிமைக்காக', 'தமிழ்நாட்டின் பெருமைக்காக', 'மானுடச் சமத்துவத்திற்காக', 'மானுட ஒற்றுமைக்காக', ... இதை வாங்கிப் படியுங்கள்! வாங்கிப் படியுங்கள்! வாங்கிப் படியுங்கள்!" என்று கூவிக்கூவி விற்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை எதையும் இனாமாக கொடுப்பதினால் பயன் வராது! பயன் வராது! பயன் வராது! விலை கொடுத்து வாங்குபவர்கள் முழுவதையும் படித்துப் பார்ப்பார்கள்; முடிந்தவரை பயன்படுத்திப் பார்ப்பார்கள். இது, அடியேனின் அன்பு வேண்டுகோள். தாங்கள் அ.வி.தி. தலைமைச் செயலாளர் என்பதால் வாரக் கூட்டங்களிலும், மாதக் கூட்டங்களிலும் இந்த அஞ்சலை படித்துக் காட்டி விவாதித்த பிறகு எனக்கு அஞ்சல் எழுதுமாறு வேண்டுகிறேன்.

5) பெருமதிப்பிற்குரிய பரமாச்சாரியார் அவர்களே! நமது குருதேவர் அடிக்கடி "நாம் முழுக்க முழுக்க மதவாதிகளாகவே செயல்பட்டுச் சென்றிடக் கூடாது. நாம் ஆண்டவர்களைப் பற்றி மட்டும் பேசிவிட்டுச் சென்று விடக் கூடாது. ஆள்பவர்களையும், ஆளப் போகிறவர்களையும் பற்றிப் பேச வேண்டும். நாம் ஆண்டவர்களையே பெரியவர்கள் என்று கூறிக்கொண்டிருக்கக் கூடாது. இன்றைய வாழ்வில் பல பெரியவர்களை உருவாக்க வேண்டும். வருங்காலத்தில் என்றென்றும், காலங்கள் தோறும் பெரியவர்கள் பலர் அனைத்துத் துறைகளிலும் தோன்றிக் கொண்டே இருக்கும் வண்ணம் முழுமையாகச் செயல்பட்டிடல் வேண்டும். நம்மை வாய்ச்சொல் வீரர்களாகவோ! பழங்கதை பேசுபவர்களாகவோ! கனவுலக வாதிகளாகவோ! முரட்டுப் பிடிவாதக்கார வறட்டு வேதாந்திகளாகவோ! முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடும் மூடநம்பிக்கைக் காரர்களாகவோ! ... யாரும்

குறைகூறிக் குற்றம் சாட்டிடா வண்ணம் வாழவேண்டியவர் நாம். எனவே, நாம் எந்தப் புதிய பயனுள்ள தத்துவத்தையும், சித்தாந்தத்தையும் முழுமையாக வரவேற்று ஒப்புக்கொண்டு செயல்படுத்தும் புரட்சிச் சிந்தனையாளர்களாகவே வளர வேண்டும்! வளர வேண்டும்! வளர வேண்டும்! ...” என்று கூறிடுவதை ஒவ்வொருவரும் சிறிய சிறிய கையெழுத்துப் பிரதிகளாகவோ அல்லது அச்சிட்டுப் பிரதிகளாகவோ, எப்போதும் கையில் தயாராக வைத்திருந்து நம்மைச் சந்திப்பவர்களிடம் கொடுத்து நம்மையும் நமது கொள்கைகளையும் குறிக்கோளையும் நமது தலைவரான தத்துவ நாயகரையும், நமது பிற செயல்திட்டங்களையும் அறிமுகப்படுத்த வேண்டும்! அறிமுகப்படுத்த வேண்டும்! அறிமுகப்படுத்த வேண்டும்! எனக்கு பொருள்வசதி ஏற்படும்பொழுது குருதேவரின் இந்த ஒரு கருத்துரையையாவது பல நூறாயிரக் கணக்கான அறிக்கையாக (Notice) அச்சிட்டு வழங்குவேன்! வழங்குவேன்! வழங்குவேன்! ஏனென்றால் மதவாதிகள் நம்மைப் புரட்சிவாதிகள், சீர்திருத்தவாதிகள் என்று சொல்லி ஒதுக்கி விடுகிறார்கள். இதுபோலவே, சீர்திருத்தவாதிகளும் புரட்சிவாதிகளும் நம்மை மதவாதிகள் என்று நினைத்து ஒதுக்கி விடுகிறார்கள். இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு எத்தனை காலம் நிகழ்வது? இதற்கு ஒருமுடிவு கட்டப்பட்டேயாக வேண்டும். அதாவது, நம்மவர்கள் வெறிகொண்டு தனிமனிதர்களாகவோ, சிறுசிறு கூட்டமாகவோ நம்மை பொதுமக்கள் கூடும் பொது இடங்களில் அறிமுகப் படுத்திக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடல் வேண்டும்! ஈடுபடல் வேண்டும்! ஈடுபடல் வேண்டும்! ஈடுபட்டேயாக வேண்டும்! இதற்காக அவரவர் வசதி வாய்ப்புகளுக்கேற்ப அனைவரும் முயற்சிகள் செய்ய வேண்டும் என்று அன்பு வேண்டுகோள் விடுக்கின்றேன். இதன்படிதான் இப்பொழுது நான் நிறைய நகல்கள் எழுதும் பணியில் ஈடுபட்டு உள்ளேன். நான் விரைவில் பொறுப்பான பணியில் அமர்ந்து முழுவெறியோடு, எரிமலைபோல் குமுறிச் செயல்படுவேன்! செயல்படுவேன்! செயல்படுவேன்! நம்மவர்கள் செய்யும் பூசைகளில் இன்றைய இக்கட்டான நிலை உடைத்தெறியப் படுவதற்காக அருளுலக அறிவிப்புக்களைச் செய்து அருள் வழங்குமாறு வேண்டுகிறேன்.

6) ஐயா! தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அனைத்துத் துறைகளைச் சேர்ந்த தலைவர்களும், தன்னல வெறியினால் ஏதாவது ஒருவகை ஊழல் பேர்வழிகளாகவும், கள்ளச் சந்தைக்காரர்களாகவும், கறுப்புப் பணக்காரர்களாகவும்தான் வாழ நேரிட்டுள்ளது. அதாவது, சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் எந்தத் தலைவனும் நல்லவனாக வரமுடியாத நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட இழிநிலைகளையும், அழிநிலைகளையும் முழுமையாக அழிக்கக்கூடிய சத்தியும், திறமையும், வீரமும் மதவாதிகளிடம்தான் இருக்கின்றது! இருக்கின்றது! இருக்கின்றது! எனவே, மதத்துறையும் வளமும், வலிவும், பொலிவும் பெற்று அனைத்தையும் அடக்கி ஆளக்கூடிய பேராண்மைநிலை, ஆட்சிநிலை உருவாக்கப்பட்டே ஆக வேண்டும்! ஆகவேண்டும்! ஆகவேண்டும்! அதாவது அரசியல், கலை, இலக்கியம், தொழில் முதலிய அனைத்துத் துறைகளிலும் தலைமை ஏற்று வழிநடத்தும் பொறுப்பும், உரிமையும், பெருமையும், ஆட்சிநிலையும் மதத் தலைவர்களுக்கே உண்டு என்பதை மெய்யாக்க வேண்டும்! மெய்யாக்க வேண்டும்! மெய்யாக்க வேண்டும்! எனவே, மத வேறுபாடு, போட்டி, பொறாமை, ... முதலிய அனைத்தையும் கடந்து இந்தியத் திருநாட்டில் அனைத்து மதங்களையும் ஒன்று சேர்த்து, ஒருமைப்படுத்தி, இணைத்து, ஒற்றுமையோடு செயல்படச் செய்ய வைக்கும் அரிய, பெரிய புரட்சிச் சூழ்நிலையை உருவாக்கியே தீரவேண்டும்! உருவாக்கியே தீரவேண்டும்! உருவாக்கியே தீரவேண்டும். இதற்குரிய சாதனமும், சாதனையும், போதனையும் சித்தர்நெறியே! சித்தர்களின் இலக்கியங்களே! சித்தர்களின் கொள்கைகளே! சித்தர்களின் செயல்முறைச் சித்தாந்தங்களே! சித்தர்களின் மானுடவியல் தத்துவங்களே! சித்தர்களின் சமுதாயச் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளே! சித்தர்களின் அரசியல் வேதங்களே! ... இப்பேருண்மையினை முதலில் தமிழர்களும், பிறகு தென்னிந்தியர்களும், அதற்குப் பிறகு இந்தியர்களும், அதற்குப் பிறகு உலகத்தவர்களும் தெரிந்து, புரிந்து, விரும்பி ஏற்றிடச் செய்யவேண்டும்! ஏற்றிடச் செய்யவேண்டும்! ஏற்றிடச் செய்யவேண்டும்! ஏனெனில், இந்துமத வரலாறும், வாழ்வியலும், நடைமுறையும், கொள்கையும், குறிக்கோளும்தான் உலக மதங்களுக்கும், இனச் சமுதாயங்களுக்கும், நாட்டு அரசியல்களுக்கும், நாகரீகக் கலைகளுக்கும், பண்பாட்டு இலக்கியங்களுக்கும் மூலமாக, தாயாக, கருவாக, உயிராக, ... இருக்கின்றன! இருக்கின்றன! இருக்கின்றன! அருளுலகத்தாரின் ஆணைபெற்று உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டையும், உலகச் சமத்துவச் சகோதரத்தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தையும் அருளாட்சி மூலம் உருவாக்க வந்திருக்கும் அருளாட்சி நாயகமான நமது தலைவர், குருதேவர், ஞாலகுரு, சித்தர் கருவூறார் அவர்கள் கனவை நனவாக்க நாமெல்லாம் தேனீக்கள் போல் செயல்பட்டேயாக வேண்டும்! ஆக வேண்டும்! ஆக வேண்டும்!

அன்பு கூர்ந்து பதில் எழுதவும்.

அன்பு சித்தரடியான்

---

"... ... எல்லாம் வல்ல தாத்தாக்களும் ஆத்தாக்களும் அம்மையப்பன்களும் எப்படி மண்ணுக்குள் உலோகங்களையும், நவமணிகளையும், சத்தி மிக்க எண்ணெய்களையும் நிரப்பி வைத்து ஒருசில இடங்களில் மட்டும் வெளிப்படுமாறு செய்கிறார்களோ, அப்படித்தான் கோடிக்கணக்கான மனிதருக்குள்ளும் கடவுள் தன்மையையும், அருளாற்றலையும், மானுட வாழ்வு கடந்த உயரிய சிந்தனைகளையும் உடைய மனிதர்களையும் உருவாக்கி இருக்கிறார்கள். இந்த மனிதர்கள் பெரும்பாலும் மனதுக்குள்ளேயே போராடி மண்ணோடு மண்ணாகி விடுகிறார்கள்.

உன்னைப் போல் ஒருசிலர்தான் தன்னுடைய அடிமனத்தின் உணர்வுகளை - உயிர்நாடும் பழம்பிறவிப் பயன்களை வாய்விட்டு வெளியே கூறித் தக்க குருவைத் தேடுகிறார்கள். யாம், பழம்பிறவிப் பயனாக சிறு பருவத்திலிருந்து ஆன்மீக உணர்வையும், சிந்தனையையும், செயலையும், பயிற்சிகளாலும், முயற்சிகளாலும் வளர்த்துக் கொண்டே வந்துள்ளோம். தாத்தாக்களும், ஆத்தாக்களும், அம்மையப்பன்களும் எம்மை வைரத்தைப் பட்டை பிடிப்பது போல் பல்வேறு வகையான உலகியல் சிக்கல்களிலும், தேய்வுகளிலும், தொய்வுகளிலும், மயக்க, தேக்கங்களிலும், போராட்டங்களிலும் ஈடுபடுத்தியே தயாராக்கி வருகிறார்கள்.

எனவேதான், யாம், எமது உணர்வுகளை, அநுபவங்களை, சாதனைகளை(அடைவுகளை) மூடி மறைக்காமலும், உலகியலுக்காகக் கூட்டி குறைக்காமலும் அப்படியே வெளியே எடுத்துக் கூறுகிறோம். இதன்மூலம், ஆயிரமாயிரம் ஆண்களும், பெண்களும் அருளுலகப் பொருளுலக இருளகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அது எம் செயலல்ல, தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன்கள் செயலே! ... ..."

**[6-11-89இல் குருதேவர் எழுதிய அஞ்சலிலிருந்து]**

**<u>அறிவிப்பு:</u>**

1. இந்தக் கட்டுரைத் தொகுப்பஞ்சல் பெறும் நீங்கள் இதனைப் படிப்பதோடு, உங்கள் வட்டாரத்தில் பலருக்கும் படிக்கக் கொடுங்கள். முடிந்தால் தங்கள் வட்டார நூலகங்களிலும் பொது படிப்பகங்களிலும் இதன் நகலை அளித்திடுங்கள்.
2. இதனைப் படிக்க ஆர்வமுள்ள தமிழர்களின் முகவரிகளையும் முன்னின்று சேகரித்து அனுப்பிட முயலுங்கள்.
3. இந்த அஞ்சல் வழி சேவை தொடர்ந்து விரிவாக நடைபெற்றிடத் தாங்கள் விரும்பும் நன்கொடையை கீழே காணும் அனுப்புனர் முகவரி (அ) தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு அளித்திடலாம்.



**BOOK POST**

**To**

**If undelivered please return to:**

Forum of Siddharadiyaans
C/O Mr V.Muniraju
Survey No: 34, Door No. 345
Outer Ring Road, Bellandur Post,
Bangalore East - 560103
Cell: 09972130609